முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கலியநாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.11.2018, திங்கட்கிழமை

1. **தவசித்தி கண்டு உலகினில்**
**தனிப்பெருங் கருணை வடிவாக**
**அவதாரம் கொண்ட அரங்கா**
**ஆறுமுகனாரின் ஞான சூட்சும குருவே**
2. குருவே உன் பெருமை கூறி
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**உறுதிபட தசதிகதி சோம வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள் 26.11.2018, திங்கட்கிழமை)**
3. **நூலை கலிய நாயனாரும்**
நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
ஞாலமதில் அரங்கன் தருமமே
ஞானம் வளர்க்கும் உயர் தருமமாக
4. ஆகவே வானவர்கள் இடத்தில்
அங்கீகாரம் கொள்ளப்பட்டிருக்க
யுகமக்களே உங்களின் நிலை
உயர வேண்டுமா மலர வேண்டுமா
5. வேண்டுமாயின் அரங்க மகான்
வேலவனை நோக்கி அடைந்தநல்
தொண்டுமிக்க ஞான வரத்தை
தொடர்ந்து வந்து சேவை ஆற்றி
6. ஆற்றியே அடிபணிந்து ஆசி பெற்று
அறம் வழியில் பெற்றுக் கொள்ளுங்கள்
ஏற்றிட அக்கணம் தொட்டுமே
எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு
7. காப்புடன் நீங்கள் ஈடேற உண்டான
கந்தவேலனின் சக்தி கிட்டி
ஒப்பு கொண்ட அடியவர் மூலமே
உலகமே பெருமாற்றம் காணும்
8. காணவே அரங்க ஞானியரின்
கருணைமிக்க அருள் தீட்சையை
ஞானமாக எண்ணி அடைந்தாலே
நல்லவையாக மக்களுக்கு மாறும்
9. மாறும் உயர் பக்குவங்கள்
மனநலம் சமத்துவம் சமதர்மம்
ஏறுமுகம் கண்டு அவர்கட்கு
எல்லையிலா மேல்நிலை பற்றும்

10. பற்றும் நிலைத் தன்மையும்
பரமானந்த சதாசிவ அருட்குரு
உற்றதொரு அரங்கனே எனும்
உண்மை நிலையும் விளங்கும்

11. விளங்கவே ஏற்றம் மாற்றம்
வினை அகன்று தேற்றம் தேற்றம்
கலங்கமற அரங்கனால் கிட்டும்
கண்டுரைத்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் கலியநாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தவங்களை செய்து தவசித்தி கண்டு உலகினில் தனிப்பெருங் கருணையே வடிவாக முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே முருகப்பெருமானின் ஞான சூட்சும வடிவமே, ஞானகுருவே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 10ம் நாள் 26.11.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கலியநாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கலியநாயனார்.

உலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்யும் தானதருமங்களே ஞானம் வளர்க்கும் தர்மசெயல்களாகும். அரங்கனின் தர்மசெயல்களே உயர் தருமங்களாக வானவர்களான ஞானிகளிடத்தில் அங்கீகாரம் கொள்ளப்பட்டுள்ளது. ஆதலினால் உலக மக்களே உங்களது நிலை உயர வேண்டுமாயின் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் முருகப்பெருமானை நோக்கி தவம் செய்து தர்மம் செய்து பெற்றிட்ட நற்தொண்டுமிக்க ஞான வரத்தினை நீங்களும் பெற வேண்டும்.

ஆதலினால் ஆறுமுக அரங்கனின் தர்மத்தை ஞானக்கொள்கைகளை பின்பற்றி அரங்கனை பின்தொடர்ந்து வர வேண்டும். அரங்கனின் திருவடி பணிந்து அரங்கனின் ஆசிகளைப் பெற்று அறத்தின் வழியில் வரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகரிடத்து வரங்களை பெற்றிட்ட அக்கணம் முதலாக எல்லா மக்களுக்கும் அருள் பாதுகாப்பு கிடைப்பதுடன் நீங்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வதற்கு உண்டான முருகப்பெருமானின் சக்திகளும் அவர்களுக்கு கிடைத்து அரங்கனின் திருவடி பணிந்திட்ட வரம் பெற்ற அடியவர்கள் மூலமாக உலகமே பெருமாற்றம்தனை பெற்றிடுமப்பா.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வல்லமைமிக்க திருவடிகளை பணிந்து வணங்கி அரங்கனிடத்து தீட்சை உபதேசங்களை பெற்று தீட்சை பெறுதல் என்பது ஞானம் பெறுதலாக எண்ணி தீட்சை உபதேசம்தனை முழுநம்பிக்கையோடு அடைந்திட்டவர்களுக்கு எல்லாம் நல்லவையாக மாறிடும். அவர்களது குணக்கேடுகள் நீங்கி உயர் பக்குவங்கள் உருவாகும். நல்ல மனநலம் உண்டாகும், சமத்துவம் பெருகும், சமதர்மம் செழித்தோங்கும், ஒவ்வொரு நாளும் வாழ்வினில் முன்னேற்றங்களை அடைந்து எல்லையில்லா உயர்வான நிலைகளை அடைந்து நிலைத்தன்மையும் உண்டாகி பரமானந்த சதாசிவ சற்குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே என்கிற உண்மை நிலையும் விளங்கிடும்.

அரங்கனே இவ்வுலகின் சற்குரு என்பதை உணர்ந்திட்டால் அவர்களது வாழ்வினில் வினைகள் எல்லாம் விலகி தேற்றம் தேற்றம் என ஒவ்வொரு நாளும் தேறி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் அரங்கனின் அருள் துணையினால் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கலிய நாயனார்.

–சுபம்–